தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**15 வயதுப்பிரிவு**
(01.01.2008 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

## தமிழீழத் தேசியத்தலைவர்

தமிழினத்தின் வீரவரலாற்றை மீட்டுத்தந்த வல்லமையைத் தமிழீழத் தேசியத் தலைவராகப் பெற்றவர்கள் நாங்கள். வல்வெட்டித்துறை மண்ணிலே தமிழினப் பற்றாளர்களாம் வேலுப்பிள்ளை பார்வதி இணையருக்கு மகனாகப் பிறந்த அவரை, ஈழத்தமிழினம் தங்கள் வழிகாட்டியாகவும் தலைவனாகவும் ஏற்று நிமிர்ந்த வரலாறு, மாந்த கற்பனைகளுக்கு அப்பாற்பட்டது. விடுதலை வேண்டும் மாந்தர்க்கெல்லாம் நம்பிக்கையையும் நெஞ்சுரத்தையும் ஆற்றலையும் நிமிர்வையும் இறுமாப்பையும் தருபவர் எங்கள் தலைவர் மாமா. உறுதியும் நேர்மையும் மேன்மையும் நல்லொழுக்கமும் எளிமையும் நிரம்பப்பெற்ற எங்கள் தலைவர் மாமா தமிழினத்தின் வழிகாட்டியாக நிலைபெற்றிருப்பது பெரும்பேறு.

தீர்க்கதரிசனமாகச் சிந்தித்து, முடிவுகளை எடுத்து, தமிழினத்தின் விடுதலையை இலக்காகக் கொண்ட அரசியல் தளத்திலிருந்து செயற்படுத்துவது தலைவர் மாமாவின் மிக உயர்ந்த ஆளுமை. நீண்ட காலமாக விடுதலையற்றுக் கிடந்த எம்மினத்தின் விடுதலைப் போராட்டத்தை நகர்த்தியதுடன், குமுகாய வாழ்வியலுக்குள் கிடந்த அடக்குமுறைகளையும் சாதிய ஏற்றத்தாழ்வுகளையும் அடியோடு களைவதற்காகவும் பெண் விடுதலைக்காகவும் பெண்களைப் போராட்டத்தில் இணைத்து, செப்பனிட்டுக் காட்டிய பிதாமகன் அவர். மொழி, கலை, பண்பாடு, இலக்கியங்களை வளர்ப்பதிலும் படைப்பாளர்கள், கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் எங்கள் தலைவர் மாமாவுக்கு நிகர் அவரே!

எமது இனத்தின் விடுதலைக்காக விட்டுக்கொடுப்புகள் இன்றி, தன் பேராற்றலால் பெற்ற வெற்றிகளைக் கூட, கூட்டுழைப்பின் வெற்றியாகக் கருதி மையப்புள்ளியைப் பொதுமை செய்யும் சூரியத்தேவன் அவர். 'ஓர் இனத்தின் தலைவனுக்குரிய அத்தனை ஆளுமைகளையும் பண்பையும் கொண்டவர் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்' என்பதை எதிரியே ஒப்புக்கொள்ளும் பெருமிதம், தலைவர் மாமாவுக்கே உரிய தனித்தன்மை. வல்லரசுகளின் அதிகார அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல், தமிழீழ தேசத்தைக் கட்டியெழுப்பிய தலைமகன் எங்கள் தலைவர் மாமா!

சிங்களப் பேரினவாத அரசின் கடுமையான பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் பொருண்மிய மேம்பாடு பெருக்கி, தன்னிறைவான தனியாட்சியை நிறுவி, அனைத்துலக அரங்கிலே உயர்த்தி, வல்லரசுகளையே வன்னிக்குள் வரவழைத்து எமது வாழ்வியலைத் துலங்க வைத்து, தமிழரது நிகழ் அரசை அனைத்துலகத்துக்கு எடுத்துக்காட்டு ஆக்கிய வல்லமையை வழிகாட்டியாகப் பெற்ற எம்மையும் எமது விடுதலை வீச்சையும் எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாது. வன்னிக்குள்ளேயே அதியுயர் படைக்கலப் பரிமாணத்தைக் கட்டியெழுப்பிய காலந்தந்த கரிகாலனாம் எங்கள் தேசியத்தலைவரின் வழிநடந்து சுதந்திர தமிழீழத்தை நிலைநாட்டுவோம்.

"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"